People's Watch
No.32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

A Network Towards Human Rights Monitoring, Intervention, Campaign, Research and Documentation
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)

24.10.2017

**பத்திரிகை செய்தி**

## இசக்கிமுத்து குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரின் உயிரிழப்புக்குக் காரணமான அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசை மக்கள் கண்காணிப்பகம் வலியுறுத்துகிறது.

மனித உரிமைகளைப் பாதுகாத்து வளர்த்தெடுக்கும் பணியை அரசுசாரா அமைப்பான மக்கள் கண்காணிப்பகம் நாடு முழுவதும் செய்து வருகிறது. கந்துவட்டிக் கொடுமையால் பாதிக்கப்பட்ட இசக்கிமுத்து மாவட்ட ஆட்சியரிடம் குறை தீர்க்கும் நாளில் பலமுறை புகார்மனு கொடுத்துள்ளார். ஆனால் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் சந்தீப் நந்தூரி, மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் அருண் சக்திகுமார் ஆகியோரின் விநோதமான அலட்சியப் போக்கால் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இதனால் மனமுடைந்த இசக்கிமுத்து தனது மனைவி மற்றும் இரு பச்சிளம் பெண் குழந்தைகளுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு குடும்பத்தோடு தீக்குளித்து தற்கொலை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

குடும்பத்தோடு தீக்குளித்ததில் இவரது மனைவியும், இரு பெண் குழந்தைகளும் உயிரிழந்துள்ளனர். இசக்கிமுத்து தற்போது திருநேல்வேலி அரசு மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்.

இதற்கு முக்கியக் காரணமாகத் திகழும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர், அச்சன்புதூர் காவல்நிலைய அதிகாரிகள் ஆகியோர் மீது தமிழக அரசின் தலைமைச் செயலாளர் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கண்காணிப்பகம் வலியுறுத்துகிறது.

எங்களுக்குக் கிடைத்த நம்பகமான தகவலின்படி மாவட்ட ஆட்சியரின் மக்கள் குறைதீர்க்கும் நாளில் கந்துவட்டிக் கொடுமை குறித்து இசக்கிமுத்து மாவட்ட ஆட்சியரிடம் 6 புகார் மனுக்கள்

அளித்துள்ளார். மாவட்ட ஆட்சியர் அதை அப்படியே மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பியுள்ளார். மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் அதை அப்படியே சம்பந்தப்பட்ட அச்சன்புதூர் காவல்நிலையத்திற்கு அனுப்பியுள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோரின் அக்கறையற்ற போக்கைக் கண்டு மக்கள் கண்காணிப்பகம் அதிர்ச்சி அடைகிறது.

இந்த இரண்டு அதிகாரிகளின் அலட்சியப் போக்கை தமிழக அரசு கவனத்திற்கொண்டு அவர்கள்மீது குற்றவியல் நடவடிக்கையை துவக்கவேண்டும் என மக்கள் கண்காணிப்பகம் வலியுறுத்துகிறது.

கந்துவட்டிக் கொடுமையால் பாதிக்கப்பட்டு புகார் கொடுத்த இசக்கி முத்துவுக்காக போலீசார் நியாயமாகச் செயல்படாமல் கடனைத் திருப்பி அளிக்குமாறு போலீசாரே அவரை மிரட்டி, திட்டி, அவமானப்படுத்தியிருப்பது எமது கவனத்திற்கு வந்துள்ளது. தமிழகம் முழுவதும் இதுபோன்ற வழக்குகளில் காவல்துறையினர் இதேமாதிரி நடந்துகொள்கின்றனர் என்பது தெரிய வந்துள்ளது.

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி இதை தன் வழக்காக எடுத்து இதற்கு பொறுப்பான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாநில மனித உரிமையையும் இது குறித்து விசாரணை நடத்தி உண்மையை உலகறியச் செய்ய வேண்டும்.

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு துறையில் 15 முழுநேர ஊழியர்கள் பணிபுரிகின்றனர். மாவட்ட குழந்தைகள் நல குழுமம் மற்றும் இளஞ்சிறார் நீதிச்சட்டம் உள்ளது கிராமங்கள்தோறும் அரசுசாரா அமைப்புகளின் மகளிர் சுயஉதவிக் குழுக்கள், அரசு அங்கீகாரம்பெற்ற மகளிர் சுய உதவிக்குழுக்கள் இத்தனை இருந்தும் ஒருவரால்கூட இசக்கிமுத்து குடும்பத்தைக் காப்பாற்ற முடியவில்லை. எனவே இறுதிமுடிவாக இதற்கான தீர்வைக்காண பொதுச்சமூகத்தையே வலியுறுத்துவோம்.



(ஹென்றி திபேன்)

நிர்வாக இயக்குநர், மக்கள் கண்காணிப்பகம்